தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 14, பவ — திருவள்ளுவர் ஆண்டு 2026

1995, மார்ச் 28, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்."

அவரவர் தகுதிக்கு ஏற்ப நடந்துகொள்பவர்களைச் சுற்றத்தார் பலரும் சூழ்ந்து வாழ்வார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 121, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு நிதியமைச்சர்.

121—

பர்கூர் ஊராட்சியில் வாக்குச்சாவடி அமைத்தல்

37132*—திரு. வே. பெரியசாமி** :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, பர்கூர் ஊராட்சியில் பல கிராம மக்கள் நீண்டதூரம் சென்று வாக்களிக்கும் நிலை உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், புதியதாக பள்ளி ஆரம்பித்துள்ள ஊர்களிலாவது வாக்குச்சாவடி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் *(ஆ)* : அந்தியூர் (தனி) சட்டமன்றத் தொகுதியிலுள்ள பர்கூர் ஊராட்சியில் முன்பு *7* வாக்குச்சாவடிகள் மட்டுமே இருந்தன. பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரைகளின்படி, தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலுடன், மேலும் *6* வாக்குச்சாவடிகள் கூடுதலாக அமைக்கப்பட்டு, *22—3—1994* முதல் இப்பகுதியில் *13* வாக்குச்சாவடிகள் உள்ளன.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம் அந்தியூர் தொகுதி பர்கூர் ஊராட்சிப் பகுதியில் நான் இந்தக் கேள்வியைக் கேட்கும்போது, மாண்புமிகு நம்முடைய நிதியமைச்சர் சொன்னதைப்போல அங்கே குறைந்த வாக்குச் சாவடிகளே இருந்தன. ஆனால் அதற்குப் பின்னாலே இப்போது கணக்கு எடுத்து, அதிகமான வாக்குச் சாவடிகளை இதய தெய்வம், நாம் கடவுளாக வணங்கும், மாசற்ற மாணிக்கம், மாற்று குறையா தங்கம், டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் எல்லாப் பகுதிகளுக்கும், பள்ளிக்கூடம் இல்லை என்று இருந்த அனைத்து கிராமங்களுக்கும், இப்போது ஆரம்பப் பள்ளியையும் தொடக்க பள்ளியையும் ஆரம்பித்து கொடுத்த காரணத்தினால், ஆங்காங்கு வாக்குச் சாவடிகளை அமைப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை, மாண்புமிகு நிதியமைச்சர் மூலமாக நான் அறிகின்ற காரணத்தினால், அவருக்கு நன்றியைக் கூறி, இந்தக் கேள்வியை இத்துடன் முடிக்கிறேன். *(சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏதாவது துணைக் கேள்வி இருந்தால் கேட்கலாம். கேள்வியை முடிக்கின்ற வேலை சபாநாயகரின் வேலை. *(சிரிப்பு)*

வினா எண் *122*, திரு. பி. வி. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை; திரு. சிங்காரம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.